1972 ஆகஸ்ட் 23]

கள் மூலம் தரலாம். மற்ற மாவட்டங்களில் முடியாது. குறைகள் அதிகமாக இல்லை. ஒன்றிரண்டு இருந்தாலும் உடனடியாக நீக்கப் படுகின்றது.

*280 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் வயது வரம்பை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கும் உதவி யாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) மத்திய அரசின் அனுமதியின் பேரில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங் கும் வயது வரம்பு மூன்றிலிருந்து ஆறு ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் இச்சிறப்புச் சத்துணவுத் திட்டம் இம்மாநிலத்தில் செயற்படுத்தப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: சத்துணவாக என்ன பொருள்கள் கொடுக்கப்படுகின்றன? சத்துணவு வகையில் வைட்டமின் மாத் திரைகள் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: குழந்தைகளுக்கும் தாயார்களுக்கும் சத்துணவு, வைட்டமின் மாத்திரைகள், இரும்புச் சத்துள்ள மாத்திரைகள் ஆகியவை கொடுக்கப்படுகின்றன.

திரு. வீ. செல்லதுரை: சேரிப் பகுதிக் குழந்தைகளும், தாய் மார்களும் மிகவும் பலவீனமாக இருப்பதால் மற்றவர்களுக்குக் கொடுக்கும் அளவை விட இரண்டு மடங்கு அவர்களுக்கு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதன் அவசி யத்தை உணர்ந்துதான் அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அதிகமாகக் குழந்தைகள் பெறுவதைக் குறைத்துக் கொண்டால் தாய்க்கும் சேய்க்கும் நலமாக இருக்கும்.